புதினப்பத்திரிகையாகப்பதிவு செய்யப்பெற்றது.

# ஞானசித்தி.

# The Gnana Siththi

மாதம் இருமுறை பிரசுரமாகும்.

புத்தகம் க. | யாழ்ப்பாணம்— கரவெட்டி வடக்கு
பவ-ஹூ தை-மீ க-உ திங்கட்கிழமை 1935ஆ ஜனவரிமீ 14உ | இல-கக

உ

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ணம்
ஆவடுதண்டுறையுறையுமமரரேறே.

திருச்சிற்றம்பலம்

## பத்திரிகைக் கிரயம்.

| | ரூபா | ச |
|---|---|---|
| இலங்கை இந்திய ரெங்கூன் பகுதிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ... ... ... | 3 | 00 |
| சிங்கப்பூர் பினங்கு முதலிய தேசங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு வெள்ளி ... ... | 3 | 00 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | | 10 |

பத்திரிகைக் கிரயத்தை முன்னுகவே அனுப்புதல் வேண்டும். பத்திரிகைக்கு அனுப்பும் கடிதங்களும் மனி ஓடரும் பிறவும் அடியிற் கண்டபடி எழுதி நமக்கு அனுப்புதல் வேண்டும்.

வித்துவான் சி. நாகலிங்கபிள்ளை
ஞானசித்திப்பத்திராதிபர்,
வதிரி, கரவெட்டி போஸ்ற்
இலங்கை

## தேவை! தேவை!

தமிழ் இங்கிலிஷ் பாஷைகளில் அச்சு அடுக்கும் வேலையில் பழகியவர் ஒருவர் தேவை.

பிரியமுள்ளவர் நேரில் வந்து நம்மிடம் சம்பளமுதலியன பேசிக்கொள்ள வேண்டியது,

இங்ஙனம்
ஞானசித்திப்பத்திராதிபர்.

## நமது கையொப்ப நேயர்களுக்கு.

நமது ஞான சித்திப் பத்திரிகையை வாங்கி வாசித்து வருகிற கையொப்ப நேயர்கள் வாசித்து முடிந்தவுடன் தவற விடாமல் பாதுகாத்து வைத்துக்கொண்டிருந்து வருட முடிவில் ஒன்ருகச், சேர்த்துப் புத்தகமாய்க் கட்டிவிடுதல் வேண்டும்.

சிலர் கவனித்து வைத்துக் கொள்ளாமல் கைதவறிப்போக விட்டு இப்பொழுது நம்மிடம் கேட்கிறார்கள். இனிமேலாவது பத்திரிகை கிடைத்தவுடன் படித்து முடித்துவிட்டுப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

குழுமியிருந்த அறிஞர் எல்லோரும் வெகு கவனமாய்க் கேட்டு ஆனந்தித்தனர்.

அதன்பின் ஈழகேசிப்பத்திராதிபர் அவர்கள் அப்பரும் அப்பூதியடிகளும் என்னும் பொருள் பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அதனோடு பகற்போசனத்துக்காக மகா நாடு கலைந்தது.

அதன்பின பிற்பகல் 3 மணியளவில் மகா நாடு தொடங்கியது. அதுகாலை இந்து மகாசபை என்னும் பெயரால் ஒரு சபை தாபனஞ்செய்து தலைவர் உபதலைவர் காரியதரிசி உபகாரியதரிசிமுதலியோரை நியமனஞ்செய்தனர்

பின் நவாலி திருவாளர் க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் கந்தபுராணக்குறிப்புகள் என்னும விஷயமாய் விரிவுரை நிகழ்த்தினர். அதன்பின் மகாநாட்டுத் தலைவர் மெய்கண்டார் என்னும் பொருள் பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர். இந்து சாதனப்பத்திராதிபர் திரு: ம. வே திருஞானசம்பந்தர் அவர்கள் யாவர்க்கும வந்தனங் கூறினர். த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் திருவருட்பாக்களையோதி முடித்தனர். இந்தவிதமாய் அகில இலங்கை இந்து மகாநாட்டின் 2-வது ஆண்டு விழா மங்களகரமாய் நன்கு நிறைவேறியது. —கடிதர்

---

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள்

இயற்றிய

## பெரிய புராண சூசனம்

### திருநாளைப் போவார் நாயனார் புராணம்

[சிவபெருமான் நமக்குத் தந்த கட்டளையை மீறி நடவாதே! மீறி நடந்தால் தண்டனையை அடைவாய். "ஸ்வாத்தியாயப் பிரவசனுப்யாம் ந ப்ரமதிதவ்யம்" இதன் பொருள். தன் வேதத்தை அத்தியயனஞ் செய்தல் அதனைப் பிரசங்கஞ் செய்தல் என்னும் இவ்விரு செயலினின்றும் வழுவாதே!]

ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்......கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங்கடவுளாரே என்னுங்கொள்கையுடையோர். வன்கண்ணர் அல்லர் சைவசமயிகள்.

சூசனம்:—

"தத்தம் சாதி நெறி கடவாது சிவனை வழிபடுதல்.

யாவராயினும், தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாது நின்று சிவனை வழிபடின், முத்தி பெறுவர். அவ்விதி கடந்தோர் பயன் பெறார். இத்திருநாளைப்போவார் நாயனார் தாம முற்பிறப்பில் செய்த புண்ணியமிகுதியினாலே சிவனிடத்து மெய்யன்புஉடையராகி, தாம இழிவாகிய புலையர் குலத்திற் பிறந்தமையால் அதற்கு ஏற்பச் சிவனுக்குத் தொண்டு செய்தலே முறைமையாம் என்று, சிவாலயங்கள் தோறும் பேரிகை முதலிய ஒருமுகக்கருவிகளுக்கும் மிருதங்கம் முதலிய இருமுகக் கருவிகளுக்கும தோலும், வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்தலும், ஆலயங்களின் திருவாயிற் புறத்தில் நின்றுகொண்டு ஆனந்த மிகுதியினாலே கூத்தாடிப் பாடுதலும் செய்தனர்." என்று சூசனங் கூறுவதை நோக்குமின்! நோக்குமின்!!

அன்பர்களே! நாம் வேதாகமங்களிலே விதித்தவைகளைச் செய்து விலக்கியவைகளை நீக்கி இம்மைக்கும் மறுமைக்குஞ் சுகந் தேடுதல் வேண்டும்.

சைவசித்தாந்தி.

---

## ஐதரேயோபநிடதம்.

(இம்மொழிபெயர்ப்பு ஸ்ரீ சங்கரபாஷ்யத்தைத்தழுவியது)

உபநிஷத் என்ற சப்தத்தினாலேயே ஞானத்துக்கு மோக்ஷ சாதனத்துவம் பெறப்படுகிறது. யாங்ஙனம் எனின்,—உப, நி, ஸத்; உப, நி இவ்விரண்டும் உபசர்க்கம்; ஸத் என்னுந் தாதுவுக்கு விசரணம் (பிளத்தல்) கதி (செல்லுதல்) அபஸாதனம (போக்கடித்தல்) என்னும் பொருள்கள் உள்ளன. சம்சார பீஜத்தைப் பிளப்பதனாலும், பிரமத்தினிடத்திற்குப் போகும்படி செய்வதாலும் கர்ப்ப ஜன்ம ஜரை மரணம் முதலியவற்றையொழிப்பதாலும் உபநிஷத் என்று பெயர் கூறப்பட்டது.

சாந்தி.

என்னுடைய (இவ்வுபநிடதத்தைப் படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக்கு (எக்காலத்திலும்) மனத்தின்கண் நிலைபெறுக. என் மனமும் வாக்கில் ஸ்திதியை அடைந்திருக்கின்றது. (வாக்கு மனங்களுக்கு ஒன்றற்கொன்று உதவி புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது)

ஏ சுவப் பிரகாச ஞான ரூபமான பரமாத்மாவே! (அஞ்ஞானத்தைப் போக்கடித்து) பிரகாசத்தை அடையும்படி செய்க. வாக்கு மனங்களே! எனக்குக் கீழ்ச்சொல்லிய பிரமஞானத்தை வெளியிடும் கிரந்தத்தைக் கொடுக்க (என்னிடம் வரும்படி செய்ய) சமர்த்தர்களாவீர். என்னால் கேட்கப்பட்ட கிரந்தம் அதன் பொ

ருள் இவைகளை நான் மறவாமல் இருத்தல் வேண்டும். அத்தியயனஞ் செய்யப்பட்டு (மறவாமலும் இருக்கிற) கிரந்தத்துடன் பகலையும் இரவையுஞ் சேர்த்து வைக்கிறேன். (அல்லும் பகலும் சோம்பலின்றிக் கிரந்தத்தைப் படிக்கிறேன்) (படிக்கப்பட்ட கிரந்தத்தில்) உண்மையான பொருளை (பிரமத்தை)ச் சொல்லப்போகின்றேன் நீயே சத்தியம் (மனத்தால் வாஸ்தவ பதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையைச் சொல்லுவேன்.) மேற்கூறிய பிரமமானது என்னையும் எனக்கு உபதேசிக்கிற குருவையும் காக்க.

ஞானமுண்டாவதற்கு இடையூறு நேரிடின் இச் சாந்தியைப் படித்தால் அவ்விடையூறு நசித்துவிடும்.

இன்னும் வரும்

சைவசித்தாந்தி

## வர்த்தமானங்கள்

கால நிலை:—இந்த மார்கழி மாதத்திலே மழை பெய்யவில்லை. நெற்பயிர்கள் தாய்முகங் காணு மகவு போல வாடுகின்றன.

நோய்.—இலங்கையின் பல பாகங்களிலும் ஒருவகையான காட்டுக் காய்ச்சல் என்று சொல்லப்படுகிற புதுமாதிரியான நோய் ஒன்று தோன்றி ஏராளமான உயிர்களை நாள்தோறும வாயிற் போட்டுக்கொள்ளுகின்றது. நோய்ப்பட்டார் காலன் வாய்ப்பட்டார்போல் மீள்கின்றிலர்! பொக்குளிப்பான் முதலிய நோய்களுமிருக்கின்றன.

மலையாளி திருடிக்கொண்டு ஓடினுன்:—வதிரியில் ஒரு வீட்டில் வேலை செய்து கொண்டு இருந்த மகாதேவன் என்பவன் 100 ரூபாவைக் களவெடுத்துக்கொண்டு ஓட்டம்பிடித்தான்; இது விஷயம் போலிசருக்கு உடனே அறிவிக்கப்பட்டது இவனைப் பலவிடங்களிலும் தேடிக்கொண்டு போனபோது இவன் மாங்குளததில் கண்டு பிடித்துக் கொண்டு வரப்பட்டுப் பருத்தித்துறை பொலிசுக்கோட்டில் விளங்கி நாலு மாதம் மறியல் விதிக்கப்பட்டான்.

சென்னையில் நடைபெற்ற எவ். ஆர். ஸி எஸ். என்னும் வைத்தியப் பரீக்ஷையில் 59 பேர் தோற்றி அவர்களில 21 பேர் சித்தியடைந்தனர். சித்தியடைந்தோரில் 13 பேர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்களென்று தெரிகிறது.

வேண்டிய காலத்தில் மழை பெய்விக்கக்கூடியதான ஒரு பெரிய மின்சாரக் கோபுரத்தை ருஷியாவிலுள்ள மலையின்மீது கட்டியிருக்கிறார்களாம்.

### ஆஸ்பத்திரியில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜன, 5 இன்று காலை கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் பாணந்துறையில் வசித்துவந்த ஏ. சாலமன் பெர்ணண்டோ வென்ற ஓர் குமாஸ்தாவின் சவத்தின்மீது நடந்த மரண விசாரணையில் தற்செயலாகஏற்பட்டமரணமென்று தீர்ப்பு கூறப்பட்டது. இறந்த மனிதன்சென்ற வெள்ளிக்கிழமையன்று பாணந்துறையில் செண்ட் பீடர் கல்லூரி ரெக்டர் நிகோலாஸ் பெரேரா சாமியாரும் பேஸில் வீரதுங்கா சாமியாரும் வந்த ஓர் மோட்டாரினுல் மோதப்பட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டானும்.

### பருத்தித்துறை பொலிஸ் கோட்டில் விளக்கம் நடந்து இம்முறை சுப்ரீங்கோட்டில் விளக்கம் நடக்கும்.

வழக்காளி சண்முகம் பொன்னம்மா
எதிரிகள் வல்லியப்பர் இராமலிங்கமும் மற்று மூவரும்
சுப்ரீங்கோட்டு வழக்காகி விட்டது:—வதிரியில் இருக்கும் சண்முகம் மகள் பொன்னம்மா வழக்காளியாகவும் மேற்படியூர் வல்லியப்பர் இராமலிங்கம் முதலான நால்வரை எதிரிகளாகவுங் கொண்டு எழுந்த வழக்கானது பருத்தித்துறை நீதிதலத்தில் விளங்கி முடிந்து இம்முறை யாழ்ப்பாணச் சுப்ரீங்கோட்டில் விளக்கத்துக்கு வருமென்று அறிகின்றோம்.

போய்வேடமணிந்தவர் சிறையாக்கப்பட்டார் —

சென்ற டிசெம்பர் மாதம் 31-ந்தேதி திங்கட்கிழமை, மாவிட்டபுரத்தைச்சேர்ந்த கந்தப்பிள்ளை-சின்னத்தம்பி (சின்னத்துரை) என்னும் வாலிபர், தன்னை மிருக நிஷ்டூர நிவாரண சங்கப் பரிசோதகரெனக்கூறி, வயாவிளான் நாற்சந்திக் கணித்தாக நின்று அவ்வழியே வந்த வண்டியொன்றைத் தடுத்து, ஏதும் பணம் கொடுத்தால் விட்டுவிடுவேனெனக் கூறினர். வண்டிக்காரன் கொடுக்க உடன்படாது வாக்குவாத மிட்டுக்கொண்டு நிற்கையில், காத்திராப்பிரகாரம் அந்தத் தெருவால் வந்த மதுபரிபாலனப் பகுதி உத்தியோகஸ்தர் சிலர் இவரின் ஏமாற்றையறிந்து, அவ்வூர் விதானைக்கு அறிவிக்க அவர் உடனே இவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் ஒப்புவித்தார். தற்போது இவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் வழக்குவருகிற 9-ந் தேதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறதாம்.

100 பேர் பிரயாணஞ் செய்யக் கூடிய ஆகாய விமானங்களை அமெரிக்காவில் செய்து வருகிறார்கள். அவற்றில் ஸ்நானஞ்செய்யக் கூடிய தடாகங்களும் பயிற்சிச்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாம்.

சீனத்தொழிலாளர் தலைவரான திரு ஆன்பூடிங் என்பவர் வடசீனவில் ஜப்பானிய இராணுவத்தினர் இருக்கும் இடத்தை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

மட்டக்களப்பிலிருந்து 59 மைல் தூரத்திலுள்ள குமரி என்னும் கிராமத்தில் ஒரு நாய் சம்பந்தமாக உண்டாகிய சச்சரவால், அந்தக் கிராமாதிகாரியின் மகளாகிய உம்மாதா என்பவளை மாத்தோனிஸ் என்னும் சிங்களவர் கத்தியால் குத்திக்கொன்று விட்டனராம்.

யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சிக்கனச் சங்கம்:—

யாழ்ப்பாணம்,—ஜனவரி 4 ட

யாழ்ப்பாண சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவின் கீழ் திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணி சமாருக்கு கச்சேரியில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சர்க்கார் ஏஜண்டு திரு. எட்மண்ட் ரொட்றிக்கோ அக்கிராசனம் வகித்தார். யாழ்ப்பாண சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய பிரதிநிதிகள் எல்லோரும் விஜயம் செய்தனர். அப்பொழுது சங்கத்தையொட்டிய சில சட்டங்கள் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் அதன் அங்கத்தினர்களுக்குச் சிக்கன வழிகளைத் தெரிவித்துப் பணம்சேகரிக்க உதவுவதற்கும், அவசியமேற்படும்பொழுது கடன்கொடுத்து உதவுவதற்குமேயாகும். இதற்கு ஒவ்வொரு அங்கத்தினர்களும் மாதமாதம் 50 சதம் முதல் 4 ரூபாய் வரையில் அவரவர்களுடைய சம்பளத்திற்குத் தகுந்தபடி சந்தா செலுத்தவேண்டும். கீழ்க்கண்டவர்கள் ஷை சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

பேட்ரன்: வடமாகாண சர்க்கார் ஏஜண்டு.

தலைவர்

திரு எஸ் எம். டப் (வடமாகாணசர்க்கார் ஏஜண்டின் உதவி உஸ்தியோகஸ்தர்.)

காரியதரிசி

திரு பி. அம்பலவாணர்.

பொக்கிஷதார் திரு ஆர் கே அனிராம்பலம்

கமிட்டி அங்கத்தினர்கள்

திரு ஜே பி கந்தையா
,, எம் செல்வத்துரை
,, எப் ஜே ஆர் விக்கிரமசிங்கம்
,, இ- எஸ். ஹிட்ச்காக்
,, எ எ கணபதிப்பிள்ளை
,, கே செயரத்தினம்
,, எ. முத்துத் தம்பி
,, ஜே ஆர் ப்ரை
,, எ. சுப்பிரமணியம்

இதுவரையில் ஏறக்குறையமார் 96 அங்கத்தினர்கள் சங்கத்தில் பதிவுசெய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.


## நாலு மந்திரி கும்மி

நல்லூர்

சின்னத்தம்பிப்புலவர்

இயற்றியது

விலை சதம் பத்து          விற்கும் இடம்

ஞானசித்தி யந்திரசாலை.

சீக்கிரம் பெற்றுக்கொள்ளவும்
கொஞ்சம் புத்தகங்களே இருக்கின்றன.

## ஞானசித்தி

(6 மாதச் சஞ்சிகை சேர்ந்த புத்தகம்)
ஸ்ரீ விலை ரூபாய் 1 50

ஞானசித்தி அச்சுக்கூடத்தில்
விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| ஞானசித்தி 6 மாத சஞ்சிகைகள் ஒன்றாய்க்கட்டிய புத்தகம் | 1 | 50 |
| சந்தியாவந்தன ரகசியம் | 0 | 25 |
| கதிர்காமபுராணம் (செய்யுள்) | 0 | 75 |
| ஷை வசனம் | 0 | 50 |
| தட்சிணகைலாசபுராணம் (கிரந்தம்) | 2 | 00 |
| ஷை தமிழ் வசனம் | 1 | 50 |
| திருநெல்வாயிற்புராணம் (சிவபுரி) | 0 | 50 |
| மாணிக்கவாசகர் புராணம் | 0 | 60 |
| சைவசித்தாந்த சங்கிரகம் | 0 | 60 |


வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


Printed and Published by S. Nagalinga Pillai Managing Proprietor at his Gnana Siththi Press Karaveddy North, on the 14th day of January 1935.

இ. நாகலிங்கம்பிள்ளை

# ஞானசித்தி.

யாழ்ப்பாணம்—காவெட்டி வடக்கு

பவ-௵ தை-௴ ௧-௨ திங்கட்கிழமை

## பிரமாண விளக்கம்.

——0——

(197-ம் பக்கத்தொடர்ச்சி)

பக்கம் சபக்கம் விபக்கம் என்னும் மூன்றனுள்ளே, சந்தேகித்துத் துணியற்பாலதாய பொருள் இருக்குமிடம் பக்கமாம். அதற்கு எடுத்துக்காட்டப்படுவதாய்த் துணியப்பட்ட டொருள் இருக்குமிடம் சபக்கமெனப்படும். அப்பொருள் இல்லாத இடம் விபக்கமெனப்படும்.

இம்மலை தீயுடைத்து; புகையுடைமையால். அடுக்களைபோல என்னும் அனுமானத்தின்கண், துணியற்பாலதாய பொருள் தீ. அத்தீ இருக்குமிடம் மலை; அதுவே பக்கமாம். இம்மலைக்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்படுவது அடுக்களை. அதில் துணியப்பட்ட பொருளாகிய தீ இருக்கின்றது. ஆதலால், அது சபக்கமெனப்படும். அப்பொருள் சென்றடையாத இடம் மடு. அது விபக்கமெனப்படும். பக்கம் சபக்கம் இரண்டும் பொருள் உண்டென அறிதற்கிடமாம். விபக்கம் பொருள் இல்லை யென்று அறிதற்கு இடமாம்.

இனி இயல்பேது காரியவேது அநுபலத்தியேது என்னும் ஏது மூன்றனுள், மா முதலிய சொற்கள் மா முதலிய பொருள்களை உணர்த்துதலில் வேறு காரணமின்றி அச்சொற்களில் இயல்பாய் உள்ளதாகிய ஆற்றல் இயல்பேதுவென்று சொல்லப்படும். புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங்காரணங்களை உணர்த்துதலில் அவை காரியவேதுவெனப்படும். குளிரில்லாமை முதலிய காரிய இன்மைகள் பனி யில்லாமை முதலிய காரண இன்மைகளை உணர்த்துதலினும், பனியில்லாமை முதலிய காரண இன்மைகள் குளிரில்லாமை முதலிய காரிய இன்மைகளை உணர்த்துதலினும் அவை அநுபலத்தியேதுவென்று சொல்லப்படும்.

இனி, பிறர்பொருட்டனுமானத்தில் எடுத்துக்கொண்ட அந்நுவயச்சொல் வெதிரேகச்சொல் என்னுமிரண்டனுள் "புகையுள்ளவிடத்தே தீயுண்டு அடுக்களைபோல" என உடம்பாடு பற்றிச் சொல்லுஞ் சொல் அந்நுவயச்சொல்லாம். "தீயில்லாத விடத்துப் புகையில்லை, மடுப்போல" என மறுதலை பற்றிச் சொல்லுஞ் சொல் வெதிரேகசச்சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் மேற்கோள் ஏது திருட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னும் ஐவகை உறுப்புக்களான் விளக்கமாகக் கூறுதலுமுண்டு.

அவற்றுள், "இம்மலை தீயுடைத்து" என்பது மேற்கோள். "புகையுடைமையால்" என்பது ஏது. "அடுக்களைபோல" என்பது திருட்டாந்தம். "இதுவும் அங்ஙனம்" என்பது உபநயம். "ஆதலின் இங்ஙனம்" என்பது நிகமனம்.

இனி இந்த அநுமானமும் காட்சியநுமானம், கருதலநுமானம், ஆகமாநுமானமென மூவகைப்படும். அவற்றுள், நாற்றமுதலிய ஏதுப்பற்றி மலர் முதலிய காட்சிக்கு எட்டும்பொருளை ஆன்மாவினது ஞானசத்தி அறிவது காட்சியநுமானம். உதாரணமாக, ஓர் மறைந்தவிடத்தில் தாழை மலர் இருக்க, அதனை அதன் மணம் வீசுதலாகிய ஏதுவைக்கொண்டு இங்கே தாழை மலர் உள்ளது என அறிதல் காட்சியநுமானமாம். தாழை மலர் காட்சிப்பொருளாயினும் அதனை அதன் வாசனை வாயிலாக அறிய வேண்டுதலின், அது காட்சியநுமானம் எனப்பட்டது. ஒருவன் பேசும் மொழியைக்கொண்டு அவனுடைய அறிவு இவ்வளவென்று தன் குறிப்பால் அறிதல் கருதலநுமானம்

முன் வினை யெனப்படும் இதம் அகிதங்களாவன முற்பிறவியின் அவ்வாறு நிகழும் முயற்சியேயாமானால், "இங்கும் அவை செயின் மேலைக்காகும்" என்றாற்போல வேதாகமங்களுட் சொல்லியது கொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமை பற்றி ஊகித்துத் துணிவதாய் ஆன்மசிற்சத்தி அறிவது ஆகமாநுமானமாம்.

இனி, ஆகமமாவது அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச்செய்த வேத சிவாகமங்களாம். தந்திர கலை மந்திரகலை உபதேசகலை யென்னும் அவற்றின் வகையாவன:—வேதசிவாகமங்கள் கன்மகாண்டம் உபாசனா காண்டம் ஞானகாண்டம் என மூவகைப்படுதலின், அவற்றுள் கரும காண்டம் பற்றிப்பின்னொடு முன் மாறுகோளின்றி அநுட்டித்தலை ஆன்ம சிற்சத்தியறிவது தந்திர கலையாம். உபாசனா காண்டம் பற்றி மனமுதலியவற்றை யடக்கிக் கடவுளை வழிபடும் உண்மையை ஆன்மசிற்சத்தி யுணர்வது மந்திரகலை யெனப்படும். ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவும் இல்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனாதல், தன்னின் வேறாகிய பசு பாசங்களை யுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் ஆன்மாவினது ஞானசத்தி யுணர்வது உபதேச கலை யெனப்படும்.

இவ்வாறு காட்சி அநுமானம் ஆகமம் என்னும் பிரமாணங்களின் இயல்பு பகுத்துணரப்படுமென்க.

## விவிலிய நூல்.

விவிலியம் என்பது கிறிஸ்தவர்கள் கொள்ளுஞ் சமய நூல். அது பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இரண்டு ஏற்பாடாயிருக்கும். பழைய ஏற்பாடு இற்றைக்கு நாலாயிரம் வருஷத்தினுள் மோசே என்பவனை ஆதியாகக்கொண்டு காலந்தோறும் ஒவ்வொருவரால் எழுதப்பட்டுப் பிற்காலத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் பின் அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்தின் முற்பட்ட வருஷ அளவில் மத்தேயு முதலானவர்களால் எழுதப்பட்டுப் பிற்காலத்தவரால அங்கீகரிக்கப்பட்டது.

உலகம் இப்பொழுதுள்ள நிலைமை உணர்ந்த தத்துவ சாஸ்திரிகள் யாவரும் ஒத்த கருத்தாக இவ்வுலகந் தோன்றிப் பல கோடி வருஷங்கள் கழிந்தன வென்று கணிக்கின்றார்கள். கிறிஸ்தவருள்ளும் அங்கிலேய தத்துவ சாஸ்திர அறிவுடைய விவேகிகள் பலர் நடுநிலை பிறழாது இக்கருத்தே கொள்கின்றனர். பாதிரிமாரும் ஆங்கில வித்தியாசாலைகளில் இவ்வாறே போதிக்கின்றனர். அதனால் இக்கால வரையறை சர்வாங்கீகாரமாம்.

உலகந் தோன்றிய பொழுதே மனிதருந் தோன்றியிருப்பர். மனிதர் தோன்றிய பொழுதே பாவ புண்ணியச் செயலும் உடையவராவர். பாவ புண்ணியச் செயலுடையவரான பொழுதே விதி விலக்கு நெறி கற்பிக்கப்படல் வேண்டும். அந்த விதி விலக்கு நெறியுடையதே மார்க்கமாம். அதைப் போதிப்பதே வேதமெனக.

உலகந் தோன்றிய இத்தனை கோடி வருஷங்களிலும் மனிதர் புண்ணிய பாவமற்று இருந்திருப்பார்களா? புண்ணியச்செயலோடு இருந்திருப்பார்களா? புண்ணிய பாவமற்றிருப்பது மனித சுபாவமன்றாகையால், அவை யுடையவராய் இருந்திருப்பர். அவ்வாறாக, முற்றறிவுடைய கடவுள் அந்த மனிதரைப்படைத்த பொழுதே அவர் நடந்துகொள்ள வேண்டிய விதி விலக்குகளையும் அவர்களுக்குப் போதிக்காமல் இருப்பாரா? போதித்திருப்பார் என்பதே உண்மையாம.

அப்படி உலகசிருட்டியின் போதே மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட நூல் எது? விவிலியநூலென்று சொல்ல இடமில்லை அநேக கோடி வருஷங்களுக்கும் நான்கு ஆயிர வருஷங்களுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. அநேக கோடி வருஷங்களுக்குப் பின் உண்டான விவிலியநூலை அநேக கோடி வருஷங்களுக்கு முற்பட இருந்தவர்களுக்குக் கொடுத்தார் என்றல் பொருந்தாதொழியும். ஒரு நூலையுங் கொடாமலிருந்தார் என்றலுங் கூடாது சர்வஞ்ஞத்துவமுடைய கடவுள் மனிதரைப் படைத்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய விதி விலக்கு நூலைக் கொடுக்க அறியாமல் விட்டிருப்பாரா? புண்ணியமென்றும் அவற்றின் பலனாகிய இன்பத் துன்பங்களென்றும் பாகுபாடு இருக்கும்போது அவற்றை யறிந்து பாவஞ்செய்யாது விலகிப் புண்ணிய நெறி நடந்து துன்பம் அனுபவியாது இன்பம் பெற்று வாழும்படி துணை செய்ய வேண்டுவது மனிதரைப் படைத்த கடவுளுடைய கடமை அல்லவா? அப்படியிருக்க, உலகந் தோன்றிய அநேக கோடி வருஷம் வரையில் ஒரு நூலையுங் கொடாமலே இருந்திருப்பாரென்பது நம்பத்தக்கதாகுமா?

சைவ சமயத்தவர்கள் உலகந் தோன்றிய அக்கால முதல் வேதம் ஆகமம் என்னுஞ் சமய சாஸ்திரங்களைக் கடவுள் கொடுக்க ஆதி தொடங்கி அவற்றை யுடையவர்களாகவே இருக்கிறார்கள். கிறிஸ்து மார்க்க விவிலிய நூல் அப்படி ஆதி தொடங்கி இருக்கவில்லை. இடையில் அதுவும் இப்பொழுது சில காலங்களுக்கு முன் உண்டானதாக இருக்கிறது அதனால் அதை எல்லார்க்கும் உரிய நூலென்று கொள்ள இடமில்லை. அன்றியும், முற்றறிவுடைய கடவுளாற் கொடுக்கப்பட்ட நூலென்று கொள்ளவும் இடமில்லை; முற்றறிவுடைய கடவுள் கொடுத்தது உண்மையானால் உலகசிருட்டியின போதே கொடுத்திருக்கவேண்டும். அப்படி இல்லை எனபதும் நாலாயிர வருடங்களுக்கு உட்பட்டே கொடுக்கப்பட்டதென்பதும் கிறிஸ்தவர் கொள்கையாதலால், விவிலிய நூலில் இக்குறை பூரணமாயிருக்கிறது. அறிவில்லாத சில கிறிஸ்தவச்சனங்கள் முன் எண்ணியிருந்தபடி உலகம் ஆறாயிர வருடங்கள் அளவில் தான் உண்டானதென்று வைத்துப் பார்த்தாலும் விவிலிய நூல் ஆதாம் ஏவாளுக்குக் கொடுக்கப்படாமையால், அவர்களுக்குப் புண்ணிய பாவ விதி விலக்கு நெறி யுணர்த்த அதனைக் கொடாமை ஒரு குற்றமாம். ஆதாம் ஏவாளுடைய புத்திர பௌத்திரர்க்கேனும் கொடுக்கப்பட்டதா? இரண்டாயிர வருஷ பரியந்தம் வந்த ஒருவர்க்குங் கொடுக்கப்படவில்லை. மோசே காலத்திற் சிலவும், அதன் பின்பு சிலவாக விவிலிய நூல் பல காலங்களில எழுதப்பட்டதாக இருக்கிறது. வேதமானால் ஒரே காலத்தில் ஒருங்கே யுண்டாகவேண்டும் அப்படி யின்றிக் காலந்தோறுஞ் சிறிது சிறிதாக மனித சந்ததியால் எழுதப்பட்டமையால் வேதமென்றும் முற்றறிவு முற்றுத்தொழிலுடைய கடவுளாற்செய்யப்பட்டதென்றும் சொல்ல இடமில்லை. பழைய ஏற்பாட்டின் கதி இப்படியாக, புதிய ஏற்பாடோ உலகம் உண்டானதாகச் சொல்லப்படும் நாலாயிர வருஷங்களின் பின் அதாவது இற்றைக்கு இரண்டாயிர வருஷங்களுக்கு இடையில் அதுவும் ஒரே காலத்து உண்டாக்கப்படாது நாளடைவில் ஒவ்வொருவரால் எழுதப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாடு பிரயோசனமுள்ளதானால் முன்னுள்ளவர்களுக்கு அது கொடுக்கப்படாதது என்னை? அதிலுள்ள

நன்மைகளை முன்னுள்ளோர் அடைய வேண்டியிருக்கவில்லையா? அப்படியானால் வேதலக்ஷணமாகுமா?

மேலும் விவிலிய நூலை அறியாத சனங்கள் இன்னும் இருக்கிறார்கள். விவிலிய நூல் கொடுக்கப்பட்டபோது எல்லாத் தேசத்தாருக்கும் எல்லாச் சனங்களுக்கும் ஒருங்கே ஒரே காலத்துக் கொடுக்கப்படவில்லை. சில தேசத்துச் சில சாதியார்க்குமட்டும் கொடுக்கப்பட்டது. இன்னும் சரிவர எல்லார்க்கும் கொடுத்து முடியவுமில்லை.

ஆதலால் இவைகளையெல்லாம் யோசிக்கும்போது விவிலிய நூல் முற்றறிவுடைய கடவுளாற் கொடுக்கப்பட்டதுதானென்று அங்கீகரிக்க இடமில்லை.

உலகந்தோன்றிய இத்தனை கோடி வருஷங்களின் பின் எவரோ சிலர் கூடி அல்லது தனியாக இது தேவவாக்கென்று கற்பித்து எழுதி வைத்ததாகவே ஊகிக்க இடமாகின்றது. சைவசமயிகளாகிய நமக்கு இவ்வளவு ஆசங்கைக்கு இடமில்லாதபடி வேதாகமங்கள் உலக சிருட்டி முதலாகவே கொடுக்கப்பட்டிருக்க அந்த வேத ஆகமங்களைக் கைவிட்டு விவிலிய நூலை அங்கீகரிப்பது எப்படி? பாதிரிமாரும் கிறிஸ்தவரும் விவிலிய நூலை அங்கீகரிக்கும்படி மிகப் பாடுபடுகிறார்கள். நியாயமோ இடங்கொடுக்கவில்லை. அநியாயமாய் ஒத்துக்கொள்ளச் சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா? அறிவு தடை செய்கின்றதே!

# கடிதங்கள்

## ஞானசித்திப் பத்திரிகை.

உலகத்திலே பல பத்திரிகைகள் நடைபெற்றாலும் சமய விஷயமான ஞான போதனைகளைப் போதிக்கும் பத்திரிகைகள் மிகச் சில. அவற்றுள்ளும் அரிய விஷயங்களை ஆபரணமாகப் பூண்டு வெளி வரும் பத்திரிகைகள் அரியனவாம். இந்த ஞானசித்திப் பத்திரிகை இப்பொழுது ஆறுமாதகாலங்களாகத் தன் அங்கத்தில் அரிதினும் அரியவற்றினும் அரியவான பல விஷயங்களை அணிந்து மிக்க பிரகாசத்தோடு வருதலை நாம் காண்கின்றோம். இக்காலத்திற் பலரும் பல தொழில்முறைகளுக்கேற்ற கல்வியையே பயின்று சமய போதனைகளடங்கிய கல்வியை ஆராயாது விட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பின்பு நல்லறிவு வந்த காலத்தில் இங்கிலீஷிலுந் தமிழிலும் அச்சிட்டுள்ள புத்தகங்களை ஆராயத் தொடங்கி உண்மை முறையான போதனை இல்லாமையால் அநேகவிதமான சந்தேகங்கள் சனிக்கத்தெளிவில்லாமல் மயங்கி, விபரீதமாகப் பொருள் கொண்டு அல்லற்பட வேண்டியதாய் இருக்கிறது. அப்படி விபரீதப்பொருள் கொண்டு மயங்கியவருள் யானும் ஒருவன். என்னுடைய அறிவை மாயாவாதிகள் எழுதியிருந்த போதனைகள் பேதித்துவிட்டன. வேதாந்தம் என்றால் மாயாவாதந்தான் என்று வெகுநாள் எண்ணியிருந்தேன். வேதங்களும் வேதாந்தமாகிய உபநிடதங்களும் மாயாவாத பரமே யென்று வெகு நாள் எண்ணியிருந்தேன். சைவசித்தாந்தத்தில் மாயாவாதிகள் தொடுக்கும் ஆட்சேபங்களை எல்லாம் பலமுடையவையென்றும அவ்வாட்சேபனைகளுக்குச் சைவசித்தாந்தத்தில் விடை இருக்கமாட்டாது என்றம், அவ்விஷயத்தில் சைவசித்தாந்தங் குறையுடையதேயென்றும் எண்ணியிருந்தேன். ஞானசித்தி தோன்றிய காலம் முதல் அதனை விடாமல் நன்றாக ஆராய்ந்து வந்ததில் எனக்கு மாயாவாதத்தில் இருந்த பிரமை நீங்கிவிட்டது. சைவசித்தாந்தத்தின் அருமையான நுட்ப விஷயங்கள் பல அவ்வப்பொழுது ஞானசித்தியில வருதலால் என்னறிவிற் பரந்து கிடந்த அநேக ஆசங்கைகள் ஆதித்தன் முன் பனி போல அகன்றுவிட்டன. சைவசித்தாந்த உண்மை இன்னது என்பது நன்கு புலப்பட்டுவிட்டது. பத்திராதிபர் அவர்கள் எவ்வெவ்விதத்தாற் போதித்து ஊட்டலாமோ அவ்வவ்விதமெல்லாம் யோசித்து எழுதி வரும் அருமை மிகப் பாராட்டற்பாலது. மலமாயை கன்மங்கள் ஒன்றினுந் தோயாது அநாதி முத்த சித்துருவாய் ஒரு பொருள் இருக்கவேண்டுமென்பதும் அநாதி பெத்தசித்துருவாய் வேறுமொருபொருள் இருக்கவேண்டுமென்பதும் அப்பொருட்கு அநாதி பெத்தம் விளைவித்து நின்ற பொருள்களும் அவற்றின் வேறாக இருக்க வேண்டும் என்பதும,

ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறுதி யில்

என்ற உமாபதிசிவனார் வாக்குக்கு எதிர்வாக்கு இல்லையென்பதும என் அறிவிற்படியும்படி ஞானசித்தி என்னறிவை விளக்கஞ்செய்துவிட்டது ஆன்மாவைப்பற்றிய அநேக சந்தேகங்களை எனக்கு நிவிர்த்தி செய்து அதன் உண்மையை விளக்கி வைத்தது "ஆன்மா" என்னுந் தொடர்பு

கடவுளையும் ஆன்மாவையும் பற்றி உபநிடதங்கள் சொல்லும் உண்மையையும் இந்த ஞானசித்திவாயிலாக அறிந்தேன். கிழமைகள் நட்சத்திரங்கள் திதிகள் புண்ணிய காலங்களைப்பற்றி இதுவரையறியாத பல விஷயங்கள் அறிந்தேன். அத்துவித சம்பந்த உண்மையையறிந்தேன். இன்னும் எத்தனையோ அரிய விஷயங்கள் அறியக்கிடந்தன. இவையெல்லாம் ஞானசித்தியால் எனக்கு வாய்த்த ஐசுவரியங்கள் அரிய விஷயங்களைக் காணுந்தோறும் புதையல் எடுத்தவர் நெஞ்சம் போல என மனம் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை.

ஞானசித்திப் பத்திராதிபரவர்களை யான் நெடுநாளாக அறிவேன். அவர்கள் சமயாபிமானமே ஒரு வடிவெடுத்தாற்போல எப்பொழுதும் சைவத்திருநெறியை வளர்த்தலே தவமாகப் பூண்டு பிரசங்கங்களாலும் பத்திரிகையாலும் உலகில் ஞானப்பிரகாசத்தை யுண்டாக்கி வருகிறார்கள். இற்றைக்குச் சில காலங்களின் முன இவர்களை யொத்த சமய பரிபாலகர்கள் பலர் இருந்தார்கள். இப்பொழுது அவர்களில் அநேகர் மின்னொளி போல மறைந்துவிடச் சிலர் சிலர்தாமிருக்கின்றனர். இருப்பவருள்ளும் இதுவே கருத்தாய் முயன்று சமய பரிபாலனஞ் செய்பவர் அரியராயினர். அரியராகச் செய்வார் சிலருள் ஒருவராயுள்ளவர் இவர்; இக்காலத்திலே இவர்கள் எடுத்துக்கொண்ட இம்முயற்சி மிக இன்றியமையாதது. பத்திராதிபரவர்கள் எடுத்த கருமத்தை முயன்று சாதிக்குங் குணமுள்ளவர்கள். ஆயினும், அவர்களுடைய முயற்சி தவர்வற நடத்தற் பொருட்டுச் சைவசமயிகளாகிய நாமெல்லாம் லோபகுண மின்றிப் போதிய உதவி செய்தல் வேண்டும். செல்வர்கள் மனத்தாராளமாய் இச்சமயத்தில் அவருக்கு வேண்டிய பொருளுதவி செய்து பத்திரிகை பொருளால் முட்டுப்படாமல் நன்றாக நடக்கும்படி துணை புரியவேண்டும். பத்திரிகைக்காகவுஞ் சமயபரிபாலனமான பல வேலைகள் செய்வதற்காகவும் லோகோபகாரமாய்ப் புதிதாய் ஓர் அச்சுக்கூடம் ஸ்தாபித்திருப்பதாகவும் பலர் பொருளுதவி செய்திருப்பதாயும் அறிந்து சந்தோஷமடைகின்றேன். நான மட்டுமல்ல; இன்னும் அநேக அறிவாளிகள் இப்பத்திரிகையில் வரும் விஷயங்களின் அருமை பெருமைகளைப்பற்றி வியந்து புகழ்ந்து பாராட்ட நான் கேட்டிருக்கிறேன். அறிஞர்களுக்கு இஃது ஓர் புத்தமிழ்தாய் விளங்குகின்றதென்பதில தடை இல்லை.

இதனை அபிமானித்து எப்பொழுதும் நன்றாய் நடைபெற்று உலகுக்கு உபகாரஞ் செய்யும்படி வேண்டிய துணை செய்வது நம்மனோர் கடமையாம்.

க. சோமசுந்தரமுதலியார்

---

## மறு பிறப்பு.

நமது விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தார்க்கு நாம் சொல்லத்தக்கன இவையே:—

"ஆத்மார்ப்ப கினிப்" பத்திரிகை வாயிலாய் நாம் விடுத்த விண்ணப்பத்தைப் பொருட்படுத்தி, "மறுபிறப்பு" என முகவுரை பூண்ட ஒரு துண்டுப்பத்திரிகையையும் "கிறிஸ்து மார்க்க அத்தாட்சி" என்னும் ஒரு புத்தகத்தையும் நமக்கனுப்பிவைத்த கிறிஸ்தவரை நாம் அறிந்திலேமாயினும், அவர்க்கு நமது அன்பான வந்தனஞ் சொல்கின்றோம். நாம் விரும்பிய புத்தகங்கள் கிடைக்கப்பெற்றிலோமாதலால், அவைகள் நமது முயற்சிக்குப் பெரிதும் பயன்படுமெனக்கொண்டு, அவற்றைச் சாவதானமாய்ப் பன்முறை படித்துப் பார்த்தோம். அவை நமது முயற்சிக்குப் பயன்படாதனவாகவே இருக்கின்றன. ஆயின், அவை வாயிலாய் நாம் மறுபிறப்பைப்பற்றிய கிறிஸ்தவரது உள்ளக்கிடக்கைகளை ஒருவாறு படித்துத்தெறினோம். புரோத்தெஸ்தன் கிறிஸ்த போதகராகிய மெஸ். ஹன்ற் என்பவரால் எழுதப்பட்ட "கிறிஸ்து மார்க்க அத்தாட்சி"யில் மறுபிறப்பைப் பற்றி ஆட்சேபிக்கப்படும் ஆட்சேபங்கள் தகுதியானவைகளாயும், மறுபிறப்பு உண்டென்பார் அவற்றிற்குச் சமாதானமாய் விடையிறுத்தல் கடனாகவும் இருக்கின்றன. ஆயின், ரோமான் கத்தோலிக்க மத குருவாகிய மெஸ். ஞானப்பிரகாசரால் இயற்றப்பட்ட 32 பக்கங்களடங்கிய "மறுபிறப்பு" என்னும் பத்திரிகையோ நமக்கு மிகவும் வெறுப்பைத்தருவதொன்றாயிற்று. "நட்பிலட்சணந் தவறாமல் எடுத்துச்சொல்லப்" புகுந்த அக்குருவானவர் ஆதி மனுடரெனப்படும் ஆதாம் ஏவாளின் சந்ததியினராகிய தமது சாகியத்தாராயுள்ள இந்துக்களைச் "சைவப்பழங்கள்" என்றும், மாதுசிரோமணியாகிய அனனி பெசன்ற் அம்மாளை "அவள்" என்றும் இங்ஙனே பலவாறாகத்தாழ்த்தியும், அவற்றோடமையாது மறுபிறப்பைப் பற்றிய ரோமான் கத்தோலிக்க மதக் கொள்கைகளைச் "சில காலம் பொறுத்துச் சொல்ல"ற்குப் பீடிகையாகக்கொண்டு நமது சமயத்தையும் சமய நூல்களையும் இகழ்ந்தொதுக்கி நின்று, கல்வியறிவாற்றலினும் மிக விந்தையான தார்க்கிக வன்மையினும் தமக்குத்தாமே நிகராய் விளங்கலாயினர். நற்குண நற்செய்கைகளையுடைய பெரியோர்கள் இன்னோரன்ன பத்திரிகைகளைச் சிறிதும் பொருட்படுத்தார்கள்.

மெஸ். பிரகாசர் மறுபிறப்பு இன்றென்று வாதிப்பதில் நமக்குச் சிறிதும ஆட்சேபம இல்லை. ஆயின் அவர் தமக்கு ஏதுஞ் சமய நூல் உளதாயின் அவ்வுண்மையை அந்நூலைக்கொண்டு நிராகரித்தலே விவேகமாகும். அங்ஙனே மறுபிறப்பில்லையென்று கிறிஸ்துமத நூலைக்கொண்டு விளக்கப்படும் பத்திரிகைகளும் புத்தகங்களுமே மறுபிறப்புண்டென்று ஸ்தாபிக்கப்புகுவார்க்கு வேண்டிய உபகரணங்களாகும. மெஸ் பிரகாசர் தமது சமய நூல்களல்லாதனவும் தாம முறையே கற்காதனவுமாகிய சிவஞானசித்தியார் முதலிய புறமத நூல்களை ஆதாரமாகக்கொண்டு மறுஜனனம் இன்றென்று ஸ்தாபிக்கப்புகுந்தது விளாங்கனியின் பொருட்டு அவ்விளா மரத்திற் சஞ்சரிக்கும் வானரங்களுக்குக் கல்லாலெறிந்து நின்று விளாவின கனியை நோக்கி நிற்பார் போல நமது நூல்களைத் துண்டுப்பத்திரிகைகள் வாயிலாய்க் கற்றுக்கொள்ளற்குச் சூழ்ச்சியாகவேயன்றிப் பிறிதொன்றற் கன்றென்றே நாம் துணிகின்றோம். புத்தகங்கள் குச்சிலிக்கடையிலெவர்க்கும் மிகமலிவாய கப்படும். ஆயின், அவற்றைக் கற்றலோவெளிதன்று. சமயநூல்களேயாயினும் இலக்கணவிலக்கியங்களேயா

யினும் கணிதம் முதலிய பிற நூல்களேயாயினும் அவ்வப்பகுதியிற் பாண்டித்தியமுள்ள தக்க வாசானையடைந்து முறைப்படி கற்றுணராக் கல்வியறிவு அங்ஙனே கற்றோர் முன் சிறிதும் வலியெய்தாது. "கூத்தாட்டுச்சலம்பம படைவெட்டுக்குதவா" தென்பர் உலகினர். அது போல நாற்காலியில் மிகவுல்லாசமாய்ச் சாய்ந்து கிடந்து கொண்டு படித்தறிந்த குச்சிலிக்கடைப் புத்தகக்கல்வியும் பிற சமய நூல்களைக கண்டித்து வாதஞ்செய்தற்குதவாது. குருவிலலா வித்தை ஒரு போதும் வித்தையாகாது. அன்னோர் வாதம் பகை பழி பாவம் என்னும் மூன்றிற்கும் வித்தாகிப் பெருந் தீமையையே விளைவிக்கும். மெஸ். பிரகாசர் நமது சமய நூல்களனைத்தையும் கரை கண்டார்போலத் தமது பத்திரிகை வாயிலாய்த் தோன்றி நின்று நமது வேதாகமங்களைப் புரட்டித் தள்ளிவிடப் பார்க்கின்றனர். அவர் நமது சமய நூல்களைக் குருமுகமாகக் கற்றுளராயின் அந்நூல்களில் அவர்க்கு ஆட்சேபம் என்பதெதுவும் நிகழாது. நிகழுமாட்சேபங்களனைத்தும் அவ்வப்பொழுதே குருமுகமாகச் சமாதானஞ்செய்யப்பட்டே ஒழியும் சமய சாத்திரங்களைக் குருமுகமாக ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தோரிடத்து அறியாமையான வினாக்கள் ஒருபோதும் நிகழா. குரு முகமாய்க் கற்றறியாமையோடு கூடிய ஆட்சேபங்களும் தர்க்க முடிபுகளுமே அப்பத்திரிகையிற் செறிய விருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நாம் நமது துண்டுப்புத்தக வாயிலாய் விடை கொடுக்க முயல்வேமாயின், அது உமிக்குத்தலாகவே முடியும்.

மெஸ். பிரகாசர் மறே மிற்செல் முதலிய சமயப்புட்டர்களெழுதிய இங்கிலீசுப்புத்தகங்களில் நம்பிக்கை வைத்து அப்பத்திரிகையில் எழுதப்பட்ட பாகங்களை நாம் நோக்கும்போது அவையெல்லாம் அபத்தமாகவேயிருக்கக் காண்கின்றோம். ஆதாம் ஏவாள் என்னும் மக்கள் இருவரை ஆதி மனுடராக்கற்பொருட்டும் முன்பின் 1900 வருடங்களுக்கு முன் பிறந்து உழன்று இறந்தாரெனப்படுங் கிறிஸ்து வென்னும் ஓர் புருடனின் பிறப்பிறப்பை யுலகுக்கு நன்றாய் உறுதி செய்தற்பொருட்டும் இப்பிரபஞ்சத்தோற்றத்தை முன் பின் 5000 வருடங்களுக்குள்ளாக்கற்பொருட்டும் சூழ்ச்சி செய்து கொண்டு அக்கால வரையறைக்குள் அடங்காத நமது சமய முதனூல்களைக் கட்டுக்கதைகள் என்றும் அவைகள் கிறிஸ்தாப்சம் பூர்வாப்தங்களில் எழுதப்பட்டவைகள் என்றும் அன்னோரால் எழுதப்பட்ட இங்கிலீஷ் நூல்கள் நமது சமயத்தையும் சமய சாத்திரங்களையும் முற்றும் அபத்தமாக்கிப் பைபில் ஒன்றனையே உண்மையாகக் கொள்கின்றன. கிறிஸ்தவர்களது பைபில் கதையானது நவமாய் ஒரு மார்க்கத்தை உலகில் ஸ்தாபித்து வைத்து இறத்தல் வேண்டும் என்னும் பேரபேட்சையோடு ஆசிய தருக்கையில் சிலித்திறந்த சில அவிவேகிகள் ஒருங்கு சேர்ந்து தாம் ஸ்தாபிக்கப் போகும் நவமான மார்க்கப்போக்கைத் தம்முட் சிந்தித்துக் கற்பித்துக்கொண்டு தனித்தனி பிரிந்து நின்று எழுதி வைக்கப்பட்ட கட்டுக்கதையே யன்றிப் பிறிதொன்றன்று என்று நாம் சிந்திக்கு போது கிறிஸ்தவர் தம் பைபில் கதையை நம்பி நிரூபிக்குங் கால வரையறை முதலிய யாவும் நமக்குமுன ஒரு சிறிதும வலியெய்தா. சிறிதேனும் யுக்திக்கடாததும் யேகோவாவினால் ஆதியில் ஆதி மனுடருக்குக் கொடுக்கருளப்பெறாததும் பைபில் தோன்றியதற்கு முன் வாழ்ந்திறந்தார்க்குக் கற்றெருமுக வாய்க்கப்பெறாததும், பைபில் கதையை "ஒன்றுமில்லாமையிலிருந்து எழுதிச் சுருக்கிக் கட்டி வைத்தமாண்டார்க்குக் கிடைக்கப் பெறாததுமான பைபில் புத்தகத்தைக் கடவுள் அருளிச்செய்த ஒரு வேதமாக ஒப்புக்கொள்வார்க்கே மெஸ். பிரகாசர் கூற்று மிகவும் மகிழ்வைக்கொடுக்கும்

நாம் நமது சமய சாத்திரங்களை அனுசரித்து மறுபிறப்பு உண்டென்று காட்டிக்க முயன்றிலேம். நமது சமய சாத்திரங்கள் நமக்கு 'மறுபிறப்பு உண்டென உபதேசிக்கும்போது நாம் அவ்வுண்மையை மீட்டும் துண்டுப்புத்தகமாய் அச்சடித்துப் பரப்புதல் அதன் இரண்டாம் பதிப்பாகுமே யன்றிப் பெரிதும் பயன்படாது. ஆதலால் மறுபிறப்பு இல்லை யென்றும், அது "இந்துக்கள் தாயின் பாலோடே பருகிவருகிற" ஒரு சொல்கையே யன்றிப் பிறிதொன்றன்று என்றும், இங்ஙனே பலவாறு நமக்கு எடுத்து உபதேசிக்கும் மெஸ். பிரகாசர் தமது "சத்தியவேதத்தில் இப்பிறவிக்குக்காரணமாயினும் உலகத்திலுள்ள சிருட்டி பேதங்களுக்குக் காரணமாயினும் இறந்த பின்" ஞான சேஷ்டையுள்ளனவாகிய ஆன்மாக்களுக்கு முத்தி சித்தியாவிடத்து அவ்வான்மாக்களுக்கு முத்தி எப்போது எவ்வாறு சித்திக்குமென்றாயினும் முத்தி யின்பத்தை நுகர்தற்கு அருகரல்லாத ஆன்மாக்களை நித்தியநரகத்திலிட்டு வருத்துவதாகிய கர்த்தரின் வன்கண்மை எப்போது எவ்வாறு நீங்குமென்றாயினும் அங்ஙனே நித்தியநரகத்திற் கிடந்துழலும் அவ்வான்மாக்கள் "ஞான சேட்டை" யுள்ளனவாயிருந்தும் அந்நரகத்தினின்றும் கரையேறற்கு அபக்குவிகளாய் நித்திய நரகத்திற் கிடத்தற்குக் காரணம் யாதென்றாயினும் உயிர்களிற் காருண்ணியராகிய யேகோவாவின் கருணை அவ்வான்மாக்களிடத்துச் செல்லுங்காலம் ஒன்றில்லாதிருத்தற்கு ஆன்மாக்களிடத்து யேகோவா கொண்டருளிய பேதமோடு கூடிய நியாயம் இதுவென்றாயினும் கூறப்பட்டிருப்பின் அப்பாகங்களை நமக்கறிவிப்பரேல், அப்பாகங்களே நமது முயற்சிக்குப் பெரிதும் பயன்படத்தக்கன. நாம் பைபிலிற் காணப்படாத குதர்க்கங்களைப் பொருட்படுத்தி அவற்றிற்கு ஒருபோதும் விடை கூறப் புகேம். மெஸ். இராமலிங்கமவர்கள் மெஸ் பிரகாசரது குதர்க்கத்தில் விருப்பு வைத்து நமக்கெழுதிய கடிதத்திற்கு விடையாகப் பிரகாசரது "மறுபிறப்பு" என்னும் பத்திரிகை பாகம் பாகமாய்ப் பத்திரிகை வாயிலாகக் கண்டிக்கப்படத்தக்கது.

இந்து மார்க்க துண்டுப்புத்தக சங்கத்தார்.

# பெண்கள் பக்கம்

## பெண் கல்வி.

பெண்கள் கல்வி கற்கலாமோ கற்கக் கூடாதோ வென்று வினவிச் சிலர் கற்க வேண்டியது அவசியமென்றும், சிலர் கற்கக்கூடாதென்றுந் தர்க்கமிடுவர். கல்வியானது அறிவு விருத்திக்குச் சாதனமாதலால், அதனைக் கூடாதென்று சொல்வது சரியென எவரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால், அவர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வி அவர்களுடைய அறிவை வளர்க்கத்தக்கதாய் இருத்தல் வேண்டும். இக்காலத்தில் அங்கங்கு கற்பிக்கப்படுங் கல்வி பெண்களுடைய அறிவை விருத்தி செய்யத்தக்க முறையில் இருக்கவில்லை. ஆடவருக்கும் பெண்களுக்கும் வேண்டப்படும் அறிவு ஒன்றன்று. ஆடவர் பல தொழின் முறைகளைச் செய்து பொருள் சமபாதித்தற்கேற்ற அறிவு எதுவோ அதனையே விருத்தி செய்கின்றனர். பெண்களுக்கு அவ்வறிவு ஆவசியகமானதன்று; பிரயோசனமற்றதுமாம். பெண்கள் படிக்கத்தக்க காலம் மிகச் சொற்பம். அதனுள் வேண்டிய அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இப்பொழுது பள்ளிக்கூடங்களிலே பெண்களுக்குரிய பாடம் இதுவென்றும் ஆண் பிள்ளைகளுக்குரிய பாடம் இதுவென்றும் இரண்டுவிதமாக வைத்துப் படிப்பிக்கப்படவில்லை. எல்லார்க்கும் ஒரே பாடமே கற்பிக்கப்படுகின்றது. அது பெண்களுக்குப் பிரயோசனமாகும் என்று சொல்ல இடமில்லை. பெண்கள் பெரும்பாலும் வீட்டு வேலைகளையும் வீட்டு வரவு செலவுகளையும் நடத்தும் பொறுப்புடையர், குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடத்திலேயே தங்கியிருக்கின்றது. நற்குண நற்செய்கைகள் உள்ள ஒரு பெண்ணே குடும்பத்தைப் பாதுகாக்குந் திறமையுடையவளாவள். பெண்களிடத்தே கற்புடைமை யென்பது சிறந்த ஆபரணமாய் இருக்க வேண்டும். கற்பின்றி வியபிசாரமே தொழிலாகக்கொண்ட பெண்ணால் எந்தக் குடும்பமும நன்மையடையமாட்டாது

பெண்களிடத்திலே கோபம் முதலிய துர்க்குணங்கள் இல்லாமல் சாந்தம் முதலிய நற்குணங்களே அமைந்திருத்தல்வேண்டும். தீயகுணம் ஒன்றிருந்தாலும் அது குடும்பவிருத்தியைக் கெடுத்தற்கு மூலமாகும். இக்காலத்துப் பெண்களுள்ளே இபல்பான நற்குணங்கள் அமைந்திருப்பது மிக அரிதாயிருக்கின்றது. தீயகுணம் நிறைந்த பெண்களே எங்கும் மலிந்திருக்கின்றார்கள். ஆகலால், அவர்களுடைய அறிவு திருந்தி நல்லறிவு பிறக்கவேண்டுமாயின், அவ்வறிவைப் போதிக்கிற பாடங்களே அவர்களுக்குப் போதிக்கப்படுதல் வேண்டும். வீட்டு வேலைகளைப் போதிக்கும் பாடமும் குடும்ப வரவு செலவுகளை நடத்தும் போதனைகளும், இல்லற தருமத்தை உணர்த்தும் பாடங்களும், நற்குண நற்செய்கைகள் உண்டாகத்தக்க போதனைகளும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண்மைக் குணங்கள் வளரத்தக்க போதனைகளும், கற்பிலக்கணத்தை உணர்த்தும் டாடங்களும், புண்ணிய பாவ உணர்ச்சியும தெய்வ பக்தியும் வளரத்தக்க போதனைகளும் என்று சொல்லல்படும் இவை போன்ற நல்விஷயங்களடங்கிய புத்தகங்களே அவர்களுக்கு வேண்டிய பாடங்களாய் இருத்தல் வேண்டும்.

இக்காலத்தில் பெண்களுக்கு இப்படியொரு பாடம் ஆவசியகமானது என்று எண்ணி அதனை யுண்டாக்கவாவது, அதனையே கற்பிக்கவாவது எவரும் யோசனை செய்யாமையால், இக்காலத்துக் கல்வி பயன் தருமென்று சொல்ல இடமில்லை.

அதினும் கிறிஸ்தவர் பள்ளிக்கூடங்களிலே போய்ப் படிக்கும் பெண்கள் சைவசமயத்தவராகிய தமக்கு வேண்டப்படும் கல்வி சிறிதுமில்லாமல் கிறிஸ்தவராகிய அவருடைய கல்வியையே அவர்கள் போதிக்க அதனையே கற்று, அவர்களுடைய அநாசாரங்களையே பழகியுஞ் சைவசமயிகளாகிய தமக்குரிய ஆசாரங்களை இழந்தும் கெட்டுப்போகிறார்கள். அதனால் அந்தக் கிறிஸ்தவர் பள்ளிக்கூடத்திற்சென்று கற்குங் கல்வி தீமை செய்வதே யாகின்றது. இப்படி எழுத வாசிக்கப்பழகுதலே கல்வியன்று. அறிவு வளரப் பெறுதலே கல்வியாகும். அறிவு வளர்ச்சிக்குரிய பாடங்கள் இருந்தாலன்றி இப்பொழுதுள்ள பாடங்கள் பயன்பட மாட்டா. பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று முயல்வோர் யாதொன்றையும் யோசியாமல் எல்லாருய் எப்படிச் செய்கிறார்களோ அப்படியே தாமுஞ் செய்துகொண்டு போகின்றனர்.

இந்தப்பெண்கள் கல்வி விஷயத்தில் திருத்தமுண்டாக வேண்டும். பெண்களுக்கும் ஆடவர்க்கும் ஒரே பாடம் இருப்பது சரியல்ல. ஆடவர்க்கு அவர் அறிவு வளரத்தக்க விதமாகவும் பாடங்கள் இருத்தல்வேண்டும். கிறிஸ்தவருடைய பாடங்கள் பெண்களுக்குக் கட்டோடு ஆகா. கிறிஸ்தவர் பள்ளிக்கூடங்களிலே பெண்களைப் படிக்கவிடுதல் அவர்களைக் கெடுப்பதாகவே முடிகிறது.

இக்காலத்திலே முற்காலம் போலன்றி எல்லாப் பெண்களும் தப்பாமல் படிக்க முயல்வதால் இனி இந்தப் பெண் கல்வி விஷயமாய்த் தக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். அறிவாளிகள் இவைகளைச் சிந்தித்துப்புது மாதிரியான பாடங்களை அவர்களுக்கென்று தனியாக இயற்றி அவைகளையே பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கும்படி முயற்சி செய்ய வேண்டும். பெண்களுக்கெனத் தனித்தனியே அங்கங்கு பள்ளிக்கூடங்கள் வைக்கப்படல் வேண்டும் கிறிஸ்தவர் பள்ளிக்கூடங்களில் ஒரு நாளும் படிக்க விடலாகாது சைவப்பள்ளிக்கூடங்களிலும் பொதுவகையான பாடங்களே யிருக்கவேண்டுமென்று எண்ணலாகாது. சைவசமயத்திற் பிறந்த பெண்களுக்குச் சைவசமய ஆசாரப்படியுள்ள கற்பிலக்கண முதலிய போதனைகளடங்கியபாடங்களே யிருத்தல் வேண்டும். அரசனருடைய உதவியை எதிர்பார்த்தால் நம்மமர்க்கு வேண்டிய பாடங்களாகக் கற்பிக்கப்படக் கூடாமலே போகும். ஆதலால் அதனை எதிர்பாராமல், நல்ல போதனைகளடங்கிய பாடங்களை உண்டாக்கி அவைகளையே கற்பித்து வரல் வேண்டும். பெண்களுக்கென அங்கங்கே பள்ளிக்கூடங்கள் வைக்கப்படல் வேண்டும். நம்மவர் யாவரும் சைவர்களால்வைக்கைப்பட்ட அப்பள்ளிக்கூடங்களிலேயே படிக்க விடுதல் வேண்டும். இப்படிப் பயிற்றி வரும் கல்வியே பயனுடையதாகும்.

பள்ளிக்கூடங்களை விட்டு வீட்டிலிருந்து வாசிக்கும் பெண்கள் பொழுதுபோக்குக்காகவேனும் கெட்ட கதைகளைப் படிக்கலாகாது. பெரியபுராணத்திலுள்ள நாயன்மார் சரித்திரங்கள் தெய்வ பத்தியை வளர்த்தற்குச் சிறந்தவைகளாயிருப்பதால் எப்பொழுதும் அவைகளைப்படித்து வரலாம் தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்கள் அன்பை விளைவிப்பனவாதலால், அவைகளை எப்பொழுதும் ஓதல்வேண்டும் இப்படி ஆன்மலாபந் தரும் போதனைகளடங்கிய சாத்திரங்களையே படித்து வரல்வேண்டும். அப்பொழுதுதான் பெண் கல்வி பயனுடையதாகும்.

---

## வேத சிவாகமம்.

---

அதிபரமாப்தராகிய சதாசிவ மூர்த்தியினது ஊர்த்துவ முகமாகிய ஈசான முகத்தினின்று காமிகம் முதல் வாதுளம் ஈறாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும், அதோமுகங்களில் தற்புருடமுகத்தில் இருபத்தொரு சாகையுடைய இருக்குவேதமும், அகோரமுகத்தில் நூறு சாகையுடைய யசுர்வேதமும், வாமதேவ முகத்தில் ஆயிரஞ்சாகை யுடைய சாமவேதமும், சத்தியோசாத முகத்தில் ஒன்பது சாகையுடைய அதர்வவேதமுந்தோன்றின. இவ்வேதசிவாகமம் இரண்டுஞ் சிவபெருமானிடத்திலே தோன்றினமையால் முதனூலெனப்படும். இவ்வேதம் நான்கும் பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் உணர்த்துவனவாகும். பிரமகாண்டம் உபநிடதமெனவும் வேதாந்தமெனவும் வேதசிரசெனவும் பிரபல சுருதி யெனவும் பெயர்பெறும்.

இவ்வேதத்திற்கு அங்கமாகிய நூல்கள் சிக்ஷை கற்பம் வியாகரணம் நிருத்தஞ் சந்தோவிசிதி சோதிடம் என்னும் ஆறுமாம். சிக்ஷையாவது வேதங்களை உதாத்தம் அநுதாத்த முதலிய சுரவேறுபாட்டினால் உச்சரிக்கும் முறையை யறிவிப்பது. கற்பமாவது வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை யநுட்டிக்கும் முறையை யறிவிப்பது. வியாகரணமாவது வேதங்களின் எழுத்துச் சொற் பொரு ளிலக்கணங்களை அறிவிப்பது. நிருத்தமாவது வேதங்களின் சொற்களுடைய பொருளை யறிவிப்பது. சந்தோவிசிதியாவது வேதமந்திரங்களின் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும் அவ்வவைகளுக்கு எழுத்து இவ்வளவென்பதையும் அறிவிப்பது. சோதிடமாவது வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தற்குரிய காலவிசேடங்களையறிவிப்பது.

இனி, வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்கள் புராணம் நியாயம் மீமாஞ்சை மிருதி என்னும் நான்குமாம். புராணமாவது பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேத வாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது.

இன்னும் இது உலகத்தினது தோற்றமும் ஒடுக்கமும் பாரம்பரியங்களும் மனுவந்தரங்களும் பாரம்பரியக்கதைகளுமாகிய இவ்வைந்தையுங் கூறும். இதனால் புராணம் பஞ்சலக்கணமெனப் பெயர்பெறும் நியாயமாவது வேதப்பொருளைநிச்சயித்தற்கு அனுகூலமாகிய பிரமாணம் முதலியவைகளை அறிவிப்பது. மீமாஞ்சையாவது வேதப்பொருளுடைய தாற்பரியத்தை அறிதற்கு அனுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது; அது பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என இரண்டு வகைப்படும். மிருதியாவது அவ்வவ்வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்கும் உரிய தருமங்களை அறிவிப்பது. உபவேதங்கள் ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தருவவேதம் அருத்தவேதம் என்னும் நான்குமாம். ஆயுர்வேதமாவது எல்லாவற்றையும் அநுட்டித்தற்குச் சாதனமாகிய சரீரத்தை நோயின்றி நிலைபெறச் செய்தற்கு வேண்டப்படுமவைகளை அறிவிப்பது. தனுர்வேதமாவது பகைவர்களாலே நலியாது உலகத்தைக்காத்தற்

பொருட்டு வேண்டப்படும் படைக்கலப் பயிற்சியை யறிவிப்பது. காந்தருவவேதமாவது கடவுளுக்கு மகிழ்ச்சி விளைவிக்கும் இசை முதலியவைகளை அறிவிப்பது. அருத்த வேதமாவது இம்மைக்கும் மறுமைக்குஞ் சுக துக்கவேதுவாகிய பொருளை நல்வழியிற் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பது. இவ்வேதத்தின் பிரம காண்டமாகிய உபநிடதத்தையே வேதாந்தம் என்பர்.

சைவ சித்தாந்தி.

## அகில இலங்கை இந்து மகா நாடு

### 2–வது ஆண்டு விழா.

இந்த மகா நாட்டின் 2-வது ஆண்டு விழா 29-30-12-34 ஆகிய சனி ஞாயிறு என்னும் இரு நாள்களிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பாடசாலை மண்டபத்திலே கொண்டாட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் ம. பாலசுப்பிரமணியாரவர்கள் சென்னையிலிருந்து தலைமைத் தானத்தை வகிக்க வென்றே அழைக்கப்பட்டனர்.

காலையில் தலைவர் அவர்கள் மகாநாட்டு மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வீதிகள் வாழை கமுகு முதலியவைகளால் அலங்காரஞ்செய்யப்பட்டு விளங்கின.

வரவேற்புக்கழகத்தலைவர் ஸ்ரீமான். மா. சு. இளையதம்பி அவர்கள் மகாநாட்டுத்தலைவரையும் பிரதிநிதிகளையும் வரவேற்று நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர் இன்றியமையாத பல அம்சங்களோடு தீண்டாமையையும் பற்றி உருகிய அம்சங்களும் காணப்பட்டன. உபசாரப்பத்திரம் ஒன்று படித்துத் தலைவருக்கு அளித்தனர். தலைவருடைய தலைமை யுரை விரிவாய்ச் சென்று முடிந்தது. யாவரும் மத்தியானப் போசனத்திற்காகச்சென்றனர்.

பின் பிற்பகல் 3-மணியளவில் மகாநாடு தொடங்கியது. கோப்பாய் அரசினர் ஆசிரியகல்லூரித்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ மகாலிங்கசிவம் அவர்கள் தாயுமானவர் பாடல் என்னும் விஷயமாய்ப் பேசி யாவரையும் மகிழ்வித்தனர். நகைச்சுவை மேலிட நவின்ற வாசகங்கள் பண்டிதரின் வித்தக மாண்பை விளக்கின

கொழும்பு விவேகானந்த சபையாரால் அனுப்பப்பட்ட இரண்டு தங்கப்பதக்கங்கள் இரண்டு மாணவர்க்குச் சமயபாட பரீக்ஷையில் வெற்றி பெற்றதன் காரணமாக அளிக்கப்பட்டன.

பின் மகாநாட்டுத்தலைவர் மாணிக்கவாசகர் கனிவு என்னும் விஷயமாய் நீண்டதோர் பிரசங்க மழை பொழிந்தனர்.

அதன் பின் ஞானசித்திப்பத்திராதிபர் வித்வான் சி. நாகலிங்கம் அவர்கள் உபநிடதங்களுஞ் சைவமும் என்னும் பொருள் பற்றிச்சொற்பொழிவு நிகழ்த்தினர். உபநிடதப்பொருள்களையே சைவந் தன்னிடங் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டி விரித்துரைத்தனர்

பின் தலைவர் குறிப்புரையுடனும் தேவாரபாராயணத்துடனும் இராத்திரி எட்டு மணி யளவில் கூட்டம் முடிந்தது.

முடிவில் நடத்தவேண்டிய சங்கானை ஸ்ரீமத் நாகலிங்கசுவாமிகளின் தேவார பஜனை நேரமில்லாமையால் மறுதினத்தில் நடத்துவதாய்த் தீர்மானித்தனர்.

மறு நாள் காலை 9 மணியளவில் மகாநாடு தொடங்கியது. தலைவர் தலைமை ஆசனத்தை ஏற்று நடைபெறப்போகும் சொற்பொழிவு இன்னதெனத் தோற்றுவாய் செய்தனர்.

கனந்தங்கிய சுவாமி விபுலானந்தா அவர்கள் பிரசங்க மேடைமிசை எழுந்து நின்று ஆலவாயவிர்சடையண்ணல் பாகத்தமர்ந்த அங்கயற்கணம்மையை அகத்தில் தியானஞ் செய்து அமிழ்தினுமினிய தமிழ்மென் மொழியால் பகவான் பதஞ்சலி மாமுனிவர் பகர்ந்தருளிய யோகசூத்திரப்பண்பினை யெடுத்து விளக்குவாராயிர். முதற்கண் பதஞ்சலி பகவான் வடமொழி வியாகரணம் வகுத்தருளிய தவப்பேறுடையாரது அவதார மாண்பையும், திருமூலனார் இவரைப் பற்றி விளக்கிய குருமரபு வரலாற்றினையும் எடுத்து விரித்து ஆராய்ச்சி முறையினாலே விளக்கினர். யோகநூலாசிரியர் மன்று தொழுத பதஞ்சலி யெனக் கூறப்படுகின்றாராதலின், அவர் பொன்னம்பலவாணன் ஆனந்தத்தாண்டவ தரிசனஞ்செய்து, புலிமுனியோடமர்ந்த ஆதிசேட அம்சாவதாரமேயென்றும் நாகசாதியாருள் ஒருவராய் எண்ணுதற்கு இடமுண்டென்றும் கூறினர் யோகமென்பது இன்னதெனவும் அது சைவத்தோடு நெருங்கிய தொடர்புற்றதெனவும ஆகமங்களில் நான்கிலொருபாகமாய் விளங்குவது யோகமெனவும் புகழ்ந்து பாராட்டினார்; சொல்லவேண்டிய பிற்பகுதி நீண்டு செல்லும் பரப்பினதாக இருத்தலால் சுருக்கமுறையிற் பெருக்கமையப் பேசி முடித்தனர்.

சாந்தமென்னுஞ் சுவை தழுவிய வாய்மொழி அவர் தம் ஆச்சிரம மாண்பினை அறிவித்து நலஞ்செய்தது.

நம் தேசத்து வாலிபர்களுக்கு அளிக்கப்படும் ஆங்கிலக் கல்வி கேவலம அடிமைகளாய் வெற்றுடலோம்புதற்கு அன்றி ஆன்மசக்தியை வெளிப்படுத்தி வளர்த்து வருதற்கு உரியதாய் அமைதல் வேண்டும் எனவும் எடுத்துகூறினர்.